**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 27ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 11ம் நாள்
**இ.ம.எண். 5/2025**
**இல்**
**அசல் வழக்கு எண். 30/2019**

1. தனஞ்ஜெயன்
2. ரெங்கநாயகி ..மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

//எதிர்//

1. ரெங்கபாஷ்யம் ..1ம் எதிர்மனுதாரர் / வாதி
2. செந்தில்குமார் ..2ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 20.11.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. கார்த்திக்ராஜன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K. இளையராஜா, அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று 27.11.2025 இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து 1,2 பிரதிவாதிகள் தரப்பு ஆவணமாக ஏற்று குறியீடு செய்து உத்தரவு வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார். 2ம் மனுதாரருக்காகவும் இந்த அபிடவிட்டை தாக்கல் செய்துள்ளார். தங்கள் மீது 1ம் மனுதாரர்/வாதி விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி நம்பரில் DW 1 ஆக தனது தரப்பு சாட்சியாக தன்னை விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், தனது தரப்பில் விசாரணையின் போது சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் விடுபட்டு போய்விட்டதாகவும், மேற்படி ஆவணங்கள் தற்போது தான் தனக்கு கிடைத்துள்ளதாகவும், தான் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை என்றும்,

மேற்படி ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாததினால் ஏற்பட்ட கால தாமதத்தை மன்னித்து தனது தரப்பு ஆவணமாக ஏற்று குறியீடு செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது என்றும், இல்லையெனில் தனக்கு ஏராள கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே, மேற்கண்ட காரணங்களுக்காக இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து 1,2 பிரதிவாதிகள் தரப்பு ஆவணமாக ஏற்று குறியீடு செய்து உத்தரவு வேண்டி தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்:**

3. இந்த மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. எதிர்உரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மனுவில் கண்ட செய்திகள் யாவும் மறுக்கப்படுவதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றாகும், அதனை மனுதாரர்கள் மூலமாக குறியீடு செய்ய இயலாது என்றும், மேலும் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தாவா கிராம நிர்வாக அலுவலர் கிருஷ்ணகுமார் அளித்த சான்று என்றும், மேற்படி கிருஷ்ணகுமார் இவ்வழக்கில் DW2 ஆக ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், ஆகையினால் தாவா கிராம நிர்வாக அலுவலரை விசாரணை செய்ய இயலாது என்றும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தற்போது இவ்வழக்கிற்கு தேவையில்லாத ஆவணங்கள் என்றும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்றே நோக்கத்திலேயே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேலும் அந்த ஆவணங்கள் மனுதாரர்களும், கிராம நிர்வாக அலுவரும் கூட்டு சேர்ந்து கொண்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றும், எனவே, இந்த மனுவை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சினை இந்த மனுவை அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

<u>**தீர்வு:**</u>

5. மனுதாரர்கள் தரப்பில், எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி நம்பரில் பி.வா.சா. 1 ஆக மனுதாரர் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் தரப்பில் விசாரணையின் போது சில முக்கிய ஆவணங்கள் தாக்கல் செய்யாமல் விடுபட்டு போய்விட்டதாகவும், மேற்படி ஆவணங்கள் தற்போது தான் மனுதாரருக்கு கிடைத்துள்ளதாகவும், எனவே, அந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றை மனுதாரர்கள் மூலமாக குறியீடு செய்ய இயலாது என்றும், தாவா கிராம நிர்வாக அலுவலர் கிருஷ்ணகுமார் இவ்வழக்கில் பி.வா.சா. 2 ஆக ஏற்கனவே விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தற்போது இவ்வழக்கிற்கு தேவையில்லாத ஆவணங்கள் என்றும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை உரிய காலத்தில் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டுமென்றே நோக்கத்திலேயே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர்கள் தரப்பில் ஆவணங்கள் தற்போது தான் மனுதாரருக்கு கிடைத்துள்ளதாகவும், எனவே, அந்த ஆவணங்களை ஏற்றுக்கொள்ளுமாறு கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில், இந்த மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் இந்த நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்கள் ஆகும். அவைகளை பொறுத்து ஆட்சேபனை எதுவும் இருக்கும் பட்சத்தில் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறியீடு செய்யும் பொழுது ஆட்சேபனையை தக்கமுறையில் பதிவு செய்யலாம். மேலும் ஆவணங்களை பொறுத்தும் அதன் உண்மை தன்மை அதில் உள்ள சங்கதிகளை பொறுத்தும் மனுதாரர்

தக்க முறையில் நிரூபிக்க கடமைப்பட்டவர். இந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் பெறப்பட்டு குறியீடு செய்யப்பட்டது என்பதாலேயே அதிலுள்ள சங்கதிகள் அனைத்தையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டதாக தீர்மானிக்க இயலாது. இந்த ஆவணங்களை குறியீடு செய்வதால் இந்த எதிர்மனுதாரருக்கு எவ்விதமான கஷ்ட நஷ்டமோ பிரச்சனையோ ஏற்படாது. மாறாக, அசல் வழக்கில் ஒரு முழுமையான தீர்வு ஏற்பட உதவிகரமாக இருக்கும் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அனுமதிக்கலாம் என முடிவு செய்கிறது.

**8. முடிவாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகையில்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 27.11.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2025.11.27 16:34:21 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

இணைப்பு :

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2025.11.27 16:34:25 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**